உ

சிவமயம்



# கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவில்

# இராஜகோபுர திருப்பணி அறிக்கை

விசய வருடம் ஆவணி மாதம் 30ஆம் நாள்

15.09.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மூல மூர்த்தி
கல்வயல் வேதவன விநாயகர் ஆலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நினைவு கூர்வோம்...*

## திருமறைக்காட்டில்
## அமரர் பண்டிதர் கண்ட

# ஈழத்து வேதவனம்

திருமறைக்காடு என்றும் வேதாரணியம் என்றும் சிறப்பித்துச் சொல்லப்படும் வேதவனம், பாரத கண்டத்திலுள்ள திவ்விய தலங்களுள் முதன்மைபெற்ற ஒன்றாகும். இது, தேவாரம் பாடிய மூவரும், சேரமான் பெருமாள் நாயனாரும் பாடிய அருட் பாக்களைக்கொண்டது.

சிவபெருமான், இமய மலையில் மலைகளுக்கும் தமக்கும் நிகழ்ந்த மணவாளக் கோலக் காட்சியை அகத்தியருக்குக் காட்டிய தலம் வேதவனம். வேதவனத்திலே தாம்கொண்ட மணவாளக் கோலத்தைக் கல்வயலிலும் அடியாருக்குக் காட்டி அருள்பாலித்து நிற்பவர் கல்வயல் வேதவிநாயகர். இதனால், இத்தலம் ஈழத்து வேதவனம் என்று அழைக்கப்படும் தகுதி வாய்ந்தது.

ஆகவே, எங்கள் ஆலயத்தைப் பல்வகைத் திருப்பணிகளாலும் சிறப்பித்து, அதன் பெயருக்குத் தகப் பிரகாசிக்கச் செய்வது, வழிபாடு செய்யும் அடியார்கள் கடமையாகும்.

*(1983 - 1985 திருப்பணி அறிக்கை; 10.10.1985)*



"தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே"

"நாம் செய்வதெல்லாம் பிள்ளையார் செயலே
அதில் எமக்கென ஒரு பங்கும் இல்லையே
வினை பலன் யாவும் விக்னேசுவரனுடையதே
'நா மமா' எனச் சொல்லி 'ஈசுவரார்ப்பணம்' செய்வோமே"

*(நா மமா - இதின் பலாபலன் எனக்கில்லை)*

**பிள்ளையார் அடியான் அமரர் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களின் வேண்டுதல் நிறைவேறியுள்ளது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈசுவர அர்ப்பணம்

உ

"பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே."

முத்திக்குரிய சைவசாதனங்களாவன, திருக்கோயில், திருநீறு, திருவைந் தெழுத்து, சிவனடியார் சரித்திரங்கள், சிவனடியார் சங்கம், திருவருட்பாக்கள், நீதி நூல்கள், ஞான நூல்கள் முதலியனவைகளும், சரியையிற் சரியை ஆதி 32 பாதங்களுமாம்.

திருக்கோயில் எவ்வளவு முக்கியம் என்பதை உணர்த்த, "கோவில் இல்லா ஊர் அடவி காடே" என்றனர். கோவிலில் நடக்கும் நித்திய பூசை நித்திய பஞ்ச கிருத்தியத்தை உணர்த்துவது. அது நித்தியமும் நியம நேரத்தில் நடக்க வேண்டியது யாவருக்கும் தெரிந்ததே. அக் கடமை , பூசகர், அறங்காவலர் யாவரினதும் கடமையாகும்.



பண்டிதர் வேலுப்பிள்ளை 19.10.88இல் எழுதியது:

'ஒரு கோவிலுக்கு நான்கு அம்சங்கள் இன்றியமையாதன.
1. விமானம் (மூலத்தானத்தின் மேலுள்ள கோபுரம்)
2. இராச கோபுரம் (முகப்பில்)
3. மணியும் மணிக் கோபுரமும்
4. தேரும் தேர்முட்டியும்.'

இதன் குறிக்கோள், மேற்கூறிய கோபுரங்கள் எவ்வளவு உயரமாக இயன்றவரை கட்ட முடியுமோ அப்படிக் கட்ட வேண்டும். எவ்வளவு தூரத்தில் இருந்து கோபுரத்தை அடியார்கள் பார்க்கமுடியுமோ அப்படி இருக்கவேண்டும். அதாவது, அடியார் ஒருவர் கண்ணில் எந்த இடத்தில் கோபுரம் நான்கில் ஏதாவது ஒன்று தென்படுகிறதோ அந்த இடத்தில் நின்று அவர் அத் தேவதையை வணங்கவேண்டும்.

'சொல்லப்பட்ட நான்கில், இராசகோபுரம் தவிர மற்றைய மூன்றும் கட்டப்பட்டாயிற்று. இராசகோபுரத் திருப்பணி பெரிய ஒரு திருப்பணி. எனது காலத்தில் இது நடந்து முடியாது. ஆனால், எனது பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் காலத்தில் ஒருவேளை பிள்ளையார் அருளால் நிறைவேறக்கூடும்' எனவும், 'அந்த வாய்ப்பு யாருக்குக் கிட்டப்போகிறதோ' என்றும் காலம்சென்ற பண்டிதர் 19.10.88இல் எழுதியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது, இராசகோபுரம் கட்டப்பட்டு, கும்பாபிசேகமும் நடக்கின்றது. இத் திருப்பணியின் வரவு செலவு அறிக்கை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.


மானிடர்கள் எந்த விஷயத்தைச் செய்தாலும் அதில் ஒருசில குற்றங்கள் இருக்கத்தான் செய்யும். அதை மன்னிக்கவேண்டியது உயர்ந்தோர், அறிந்தோர் கடமையாகும்.

கடமையை உணர்ந்து, சரியான காலநேரத்தில் செய்யப்பட்டுள்ளது. அதன் பலாபலன் எங்கள் குறிக்கோள் அன்று.

அதுவே கீதாசாரம். அதுதான் ஈசுவர அர்ப்பணம்.

**- திருப்பணியில் கலந்துகொண்ட அடியார்கள் சார்பில்**





**ஆலய அர்ச்சகர்**
**பிரம்மஸ்ரீ ப. ஜெகதீஸ்வர சர்மா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தர்மகர்த்தா சபைத் தலைவரின்

# ஆசியுரை



இலங்கைத் தீவின் யாழ். குடாநாட்டில், சகல வளங்களும் நிறைந்து கொளிக்கும் தென்மராட்சிப் பகுதியிலே கல்வயலூரில் அமைந்துள்ள வேதவனப் பிள்ளையார் ஆலயமானது, மூர்த்தி விசேடம், தல விசேடம், தீர்த்த விசேடம் என்ற மூன்று வளங்களையும் கொண்ட, ஒரு பழமை வாய்ந்த ஆலயமாகும்.

தென்மராட்சிப் பகுதியிலே விதானை, உடையார் பரம்பரையில் சைவ வேளாண் குலத்திலே தோன்றிய கதிரேசு விதானையார் அவர்களால் பிரதிஷ்டைசெய்து வழிபட்டுவந்தது வேதவனப் பிள்ளையார் ஆலயம். கதிரேசு விதானையாரின் உறவினரான பசுபதி முருகேசு அவர்கள் வேதவனப் பிள்ளையாருக்கு பூஜை செய்வதற்காக சைவசமய முறைப்படி இரண்டாம் தீட்சை பெற்று, வேதாகம முறைப்படி இரண்டு கால நித்திய நைவேத்திய புஜைகளை நடாத்தி, வழிபட்டு வந்தார். அவர், ஆலய முன்னேற்றத்தையும் ஆலய பரிபாலனத்தையும் தாமே சிறப்பாக செய்துவந்தார். கலவயல்வாழ் மக்களும் பெரியோர்களும் அவருடன் இணைந்து, ஆலயத்தை ஆகம முறைப்படி சகல வளங்களும் கொண்டதாக அமைத்து வழிபட்டு வந்தனர். கல்வயல்வாழ் மக்கள் அவருக்கு வழங்கிய ஒத்துழைப்புடன் விசேட உற்சவங்கள், புராண படிப்புக்கள் யாவற்றையும் சிறப்புற நடாத்திவந்தார்.

பசுபதி முருகேசு அவர்கள் வயோதிபம் அடைந்துவரும் காலப்பகுதியில் ஆலய பரிபாலனத்தையும் பூஜைகளையும் சிறப்பாகவும், சைவசமய பண்புகளுக்கு அமையவும் நடத்தவேண்டும் என்ற நோக்குடன் விதானை பரம்பரையின் வழித்தோன்றலாகிய எனது தந்தையார் வாரித்தம்பி கதிரேசபிள்ளையிடம் சகல பொறுப்புக்களையும் ஒப்படைத்தார். எனது தகப்பனார் அவற்றை ஏற்று, பெரிய தகப்பனார் திரு இ. த. சுப்பிரமணியம், சிறிய தகப்பனார் திரு. இ. க. மார்க்கண்டு, மைத்துனர் இரத்தினம் ஆகியோரது ஆலோசனையுடனும் அனுசரணையுடனும் தனக்குரிய கடமைகளையும் ஆலய பணிகளையும் சிறப்புற நடாத்திவந்தார். 1981ஆம் ஆண்டு கும்பாபிஷேகமும் இடம்பெற்றது. தொடர்ந்து நடந்த திருப்பணி முயற்சியால் புதிய சித்திரத் தேரும் அமைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது தகப்பனார் கதிரேசபிள்ளையுடன் ஒத்துழைத்து திரு நடேசு ஐயா நித்திய பூஜைகளையும், விசேட உற்சவங்களை பொன்னுச்சாமிக் குருக்கள் (கிருஷ்ணசாமிக் குருக்கள்) அவர்களும் சிறப்புற நடாத்திவந்தனர். இவர்கள் மறைய, கிருஷ்ணசாமிக் குருக்களின் மகன் சிவஸ்ரீ சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் பூஜைகளைப் பொறுப்பேற்று சிறப்பாக நடாத்திவந்தார். இவருக்கு எனது தகப்பனாரும் கல்வயல் வாழ் மக்களும் போதிய ஒத்துழைப்பை வழங்கிவந்தனர்.

மீண்டும் 2004ஆம் ஆண்டில் ஆலய திருப்பணிகள் நடைபெற்று, சிறப்பாக கும்பாபிஷேகம் நடைபெற்றது. இவ்வேளையில், எனது தகப்பனாரும் வயோதிபமுற்று, தனது பொறுப்புக்களை என்னிடம் ஒப்படைத்து, எனக்கு உதவியாக திரு செல்லையா கதிரவேலு அவர்களையும், திரு மார்க்கண்டு மகேந்திரன் அவர்களையும், திரு நாகலிங்கம் ஜானககுமார் அவர்களையும், திரு சபாபதி நடராசா அவர்களையும் நியமித்துள்ளார். இவர்களது உதவியுடனும் மக்களின் உதவியுடனும் இன்று நித்திய பூஜைகள், உற்சவங்கள், படிப்புக்களும், ஆலய பரிபாலனமும் செவ்வனே நடாத்தப்பட்டுவருகின்றன. நித்திய பூஜைகள் பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வர சர்மா அவர்களாலும், விசேஷ உற்சவங்கள் சிவப்பிரம்மஸ்ரீ பரராசசேகர குருக்களாலும் நன்றே நடாத்தப்பட்டு வருகின்றன.



அண்மையில், பல அடியார்கள் முயற்சியுடனும் உதவியுடனும் அழகான பஞ்சதளங்கொண்ட இராஜகோபுரம் அமைக்கப்பெற்று நிறைவெய்தி, 15.09.2013இல் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெற எல்லாம்வல்ல வேதவனப் பிள்ளையாரின் திருவருள் கிடைக்கப்பெற்றுள்ளது. எனவே, இந்த இராஜகோபுரத்தை நிறைவுசெய்து, கும்பாபிஷேகத்தை நடாத்திமுடிக்க பல வழிகளாலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் வேதவனப் பெருமானின் கருணையும் எனது நல்லாசிகளும் சமர்ப்பணமாகட்டும்.

**அன்புடன்,**
**கதிரேசபிள்ளை தங்கராசா**
**(அறங்காவலரும்,**
**தர்மகர்த்தா சபைத் தலைவரும்)**
**வேதவனப் பிள்ளையார் கோவில்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## கரும்பிமாவடி ஸ்ரீ கந்தசாமி கோவில் ஆதீன குரு
## 'பாலகுருமணி', 'கிரியா வித்துவ ஜோதி',
## 'வேதாகம வித்துவ சிரோன்மணி'
## ஸ்ரீ க. பரராஜசேகர குருக்கள் அவர்கள்

பக்தர்கட்கெல்லாம் சிறந்த திருவருட் செல்வங்களையும் தாம்தாம் விரும்பி வேண்டிய வரங்களைத் தரவும், நாள் கோள்களினால் வரும் துயரங்களை நீக்கவும், அஷ்ட ஐஸ்வர்யங்களைப் பெற்றுய்யவும் ரிக் வேத நாயகன் வேதவன ஸ்ரீ சித்தி விநாயகர் அருளாட்சி செய்கிறார்.

அருமையானதோர் ஆதாரசக்தி, பழமைக்கும் பழமையாய், புதுமைக்கும் புதுமையாய் வேதாகம நெறிமுறை பேணி, காலத்துவம், கன்மத்துவம் கடந்து, காலங்காலமாய்க் கருணைப் பேரொளி வீசி, ஞானப்பெருங் கோபுரமாக இவ்விராஜகோபுரம் விளங்கப்போவதில் சிறிதும் ஐயமில்லை.

நாம் கோயிலைப் பார்த்தாலும் பார்க்காவிட்டாலும், கோபுரம் நம்மைப் பார்த்துக்கொண்டேயிருக்கிறது. அதைத்தான், 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்'; 'கோபுர தரிசனம் பாவ விமோசனம்' என்ற வாக்கியங்கள் சொல்கின்றன.

இவ்வாலயத்தின் தர்மகர்த்தா சபைத் தலைமைப் பதவியை ஏற்று, சிறந்த முறையில் ஆலயத்தை நிர்வகித்து அளப்பரிய சமய சமூக தொண்டுகளை ஆற்றிவரும் கதிரேசபிள்ளை தங்கராசா, இராஜகோபுர திருப்பணியை முன்னெடுத்தவர்கள், கோபுர அமைப்பு அராலியூர் சிற்பாசாரியார் கந்தசாமி கோபாலசிங்கம், முப்பொழுதும் விநாயகன் திருமேனியைத் தீண்டும் ஆலய அர்ச்சகர் பிரம்மஸ்ரீ ப. ஜெகதீஸ்வர சர்மா ஆகியோருக்கும், சிவநெறிச் செல்வர்கள், சிவதர்ம சிகாமணிகள், தொண்டர் மாமணிகள், கோபுரத்தை மெருகூட்டிய சிற்பாசாரியர்கள், ஆலய வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் கல்வயல்வாழ் பக்தப் பெருமக்களுக்கும் எல்லோருக்கும் இத்திருக்கோவிலின் தெய்வீகம் நிறைந்த விநாயகன் (வி = சிதாகாசம், அறிவு, ஆகாசம், ஞானவெளி) சிதாகாசத் தலைவர் என்ற வகையில் நிறைந்த ஆயுளையும் சஞ்சலமற்ற மனதையும் வழங்கி அவர்கள் தம் தொண்டுகளில் முழுமூச்சுடன் ஈடுபட ஆற்றுப்படுத்தி அருளுவதுடன், ஸ்ரீ வேதவனப் பிள்ளையார் கோவில் இராஜகோபுர கும்பாபிஷேகம் இனிதே நடந்தேறவும் எம்பெருமான் கரும்பிமாவடி கந்தனை நினைந்து எந்நாளும் பிரார்த்திக்கிறேன்.



வானுலகும் மண்ணுலகும் வாழ்மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத மைந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலி செய்கிற்பாம்.

சுபமஸ்து.

சாவகச்சேரி வடக்கு,
மீசாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரதம சிற்பாசாரியாரின்

# ஆசியுரை

மூஷிக வாகன மோதக ஹஸ்த
சாமர கர்ண விளம்பித சூத்ர
வாமன ரூப மகேஷ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

எல்லாம் வல்ல வேழமுகத்து விநாயகனின் பாதங்களை வணங்கி, எனது ஆசியுரையைத் தொடர்கிறேன்.

வேதவனப் பிள்ளையார் கோவிலின் இராஜகோபுர கும்பாபிஷேகம் நிகழப்பெறுவது மனதிற்கு மகிழ்வளிக்கிறது.



இவ்விராஜகோபுர திருப்பணி வேலைகளில் என்னை ஈடுபடச்செய்த விநாயகப் பெருமானை முதலில் வணங்கி, இத் திருப்பணியை திறம்பட மேற்கொண்ட உபயகாரர்களுக்கும் தர்மகர்த்தா சபையினர்க்கும் எம்பெருமானின் அருட்கடாட்சம் கிடைக்கவேண்டும் எனவும் பிரார்த்தித்து, வேதவனப் பெருமானின் அடியவர்கட்கும் இறைவனின் நல்லாசிகள் கிடைக்க வேண்டிக்கொண்டு, எனது ஆசியுரையை நிறைவுசெய்கிறேன்.

நன்றி.

**- கந்தசாமி கோபாலசிங்கம்**
அராலி,
வட்டுக்கோட்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## 'கலாபூஷணம்', 'வேதாகம சோதிட பூஷணம்', 'சிவாச்சாரியதிலகம்', 'சிவாகம பூஷணம்', 'வேதாகம வித்தகர்' சி. சிதம்பரநாத குருக்கள் அவர்கள்

*திகட சக்கர செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.*

என்பது, கந்தபுராண இலக்கியத்தின் விநாயக வணக்கப் பாடல். நம்மவர்கள் எந்தக் கருமத்தை ஆரம்பித்தாலும் விநாயக வழிபாட்டோடுதான் ஆரம்பிப்பார்கள். ஒரு கடிதம் எழுதுவதாயினும் 'உ' முதலில் இட்டு, விநாயக வணக்கம் செலுத்தப்படுகிறது. தம் இல்லத்தில் நிகழும் சுப கருமங்களின் போதும் நிறைகுடம், குத்துவிளக்கு வைத்து, மஞ்சள் மாவிலோ, சாணத்திலோ பிள்ளையார் பிடித்து, அதன்மேல் அறுகு குத்திவைத்து விநாயகரை வணங்குவார்கள்.



*கிரியைகளை ஆரம்பிக்கும்போது,*
*"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்*
*ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே'' என்ற மந்திரத்தைச் சொல்லி, தலையிலே மூன்றுமுறை குட்டி, விநாயகரை வணங்கிக் கொண்டுதான் ஆரம்பிப்பார்கள். விஷ்ணும் என்பதனால் எங்கும் வியாபித்திருப்பவரும், ப்ரஸன்ன வதனம் என்பதனால் இலகுவில் அறியக்கூடியவரும் ஆவார். எந்த ஆலயமாக இருந்தாலும் முதற்பூஜை விநாயகருக்கே உரியது.*

நமது நாட்டில் எத்தனையோ விநாயகர் ஆலயங்கள் இருந்தாலும், கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. முன்னர், ஆதி சைவர்களால் பூஜைகள் நடாத்தப்பட்டுவந்தன. தற்போது, சிவப் பிராமணக் குருமார்களால் நித்திய நைமித்தியங்கள் நடாத்தப் பட்டுவருகின்றன. இந்த ஆலயத்திலே பல திருப்பணிகளைச் செய்த பெருமைக்குரியவர் பண்டிதர் க. வேலுப்பிள்ளை அவர்கள். எவ்வளவு திருப்பணிகள் செய்தாலும், கோபுரம் இல்லாவிட்டால் அதன் அழகு குறைவாகவே கணிக்கப்படும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதை உணர்ந்த பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களின் விருப்பப்படி, வெளிநாட்டில் தொழில்புரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## 'கலாபூஷணம்', 'வேதாகம சோதிட பூஷணம்', 'சிவாச்சாரியதிலகம்', 'சிவாகம பூஷணம்', 'வேதாகம வித்தகர்'

## சி. சிதம்பரநாத குருக்கள் அவர்கள்

*திகட சக்கர செம்முக மைந்துளான்*
*சகட சக்கரத் தாமரை நாயகன்*
*அகட சக்கர வின்மணி யாவுறை*
*விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.*

என்பது, கந்தபுராண இலக்கியத்தின் விநாயக வணக்கப் பாடல். நம்மவர்கள் எந்தக் கருமத்தை ஆரம்பித்தாலும் விநாயக வழிபாட்டோடுதான் ஆரம்பிப்பார்கள். ஒரு கடிதம் எழுதுவதாயினும் 'உ' முதலில் இட்டு, விநாயக வணக்கம் செலுத்தப்படுகிறது. தம் இல்லத்தில் நிகழும் சுப கருமங்களின் போதும் நிறைகுடம், குத்துவிளக்கு வைத்து, மஞ்சள் மாவிலோ, சாணத்திலோ பிள்ளையார் பிடித்து, அதன்மேல் அறுகு குத்திவைத்து விநாயகரை வணங்குவார்கள்.



கிரியைகளை ஆரம்பிக்கும்போது,
"சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம்
ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸர்வ விக்னோப சாந்தயே'' என்ற மந்திரத்தைச் சொல்லி, தலையிலே மூன்றுமுறை குட்டி, விநாயகரை வணங்கிக் கொண்டுதான் ஆரம்பிப்பார்கள். விஷ்ணும் என்பதனால் எங்கும் வியாபித்திருப்பவரும், ப்ரஸன்ன வதனம் என்பதனால் இலகுவில் அறியக்கூடியவரும் ஆவார். எந்த ஆலயமாக இருந்தாலும் முதற்பூஜை விநாயகருக்கே உரியது.

நமது நாட்டில் எத்தனையோ விநாயகர் ஆலயங்கள் இருந்தாலும், கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்தது. முன்னர், ஆதி சைவர்களால் பூஜைகள் நடாத்தப்பட்டுவந்தன. தற்போது, சிவப் பிராமணக் குருமார்களால் நித்திய நைமித்தியங்கள் நடாத்தப்பட்டுவருகின்றன. இந்த ஆலயத்திலே பல திருப்பணிகளைச் செய்த பெருமைக்குரியவர் பண்டிதர் க. வேலுப்பிள்ளை அவர்கள். எவ்வளவு திருப்பணிகள் செய்தாலும், கோபுரம் இல்லாவிட்டால் அதன் அழகு குறைவாகவே கணிக்கப்படும்.

'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' என்பதை உணர்ந்த பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களின் விருப்பப்படி, வெளிநாட்டில் தொழில்புரியும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

முன்னாள் பிரதம குருக்கள் 'கிரியாகான கலாமணி', 'வேதாகம ஜோதி'

## சிவஸ்ரீ கி. சோமசுந்தரக் குருக்கள் (ஜே. பி.)

சாவகச்சேரி, கல்வயல் என்னும் பதியில் அமைந்துள்ள நான்கு விநாயகர் ஆலயங்களுள் பழம்பெருமை வாய்ந்ததும், மூர்த்தி, தலம், தீர்த்த விசேஷம் மூன்றும் பொருந்தியதுமாகிய ஆலயம், அருள்மிகு கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலயமாகும். தமிழ் நாட்டில் வேதாரணியம் எனும் பாடல்பெற்ற தலத்திலிருந்து கொணர்ந்து வழிபட்ட விநாயகர் ஆகையால், எம்பெருமானுக்கு 'வேதவனப் பிள்ளையார்' எனும் நாமம் வந்தது. இவ்வாலயம் விதானையார் பரம்பரையால் பரிபாலிக்கப்பட்டு வந்தமையால், 'விதானை கோயில்' என்று கூறுவதுமுண்டு. அவ்வரிசையில் வந்த திரு வா. கதிரேசபிள்ளை, அவரின் புதல்வர் தங்கராசா ஆகியோர் கல்வயல்வாழ் பெருமக்களுடன் இணைந்து நிர்வாகத்தையும் திருப்பணிகளையும் நடாத்திவந்துள்ளனர்.


முதன்முதலில் ஒரு பலாமரத்தின் கீழ் ஆலயம் அமைந்திருந்ததினாலும், பலாமரம் தலவிருட்சமாக அமைந்திருந்ததினாலும், 'பசைக்கல்வயல் விநாயகர்' என்ற நாமமும் ஏற்பட்டது (பசை என்றால் பலா மரம் என்று பொருள்படும்).பண்டிதமணி எழுதிய திருவூஞ்சல் பாவிலும், பசைக்கல்வயல் விநாயகர் எனக் குறிக்கப்பட்டுள்ளது.



முன்பொருகாலம் ஆலயத்தில் முருகு பக்தர் ஒருவர் எம்பெருமானுடைய குருவருளோடு அருள் வாக்குகள் கூறி, மக்களின் நோய் நொடிகள் தீர்த்துள்ளார். இதனால், 'முருக மூர்த்தி கோயில்' என்ற பெயரும் பழமையாக அமைந்துள்ளது.

பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்கள் காலத்தில் எம்பெருமானுக்கு இராஜ கோபுரம் ஒன்று அமைக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் மனத்தில் பதிந்திருந்த போதிலும், நாட்டின் அப்போதைய நிலைமையினால் அத் திருப்பணி பின்போடப்பட்டுவிட்டது. எனினும், அவர் பிள்ளைகள், மற்றும் வேதவன விநாயகர் அடியார்கள் பலரும் சேர்ந்து, இராஜகோபுரத் திருப்பணியை நிறைவேற்றி, இன்று இராஜகோபுர கும்பாபிஷேகமும் நடைபெறுகின்றது. இவையெல்லாம் வேதவனப் பெருமானின் பெருங்கருணையாகும்.

இப் பெரும் இராஜகோபுரத் திருப்பணியிலும், அதன் அபிஷேகத்திலும் கலந்து கொண்ட அடியார்களுக்கும், கும்பாபிஷேகத்தை நடாத்தும் சிவாச்சாரியார்களுக்கும், அந்தண பெருமக்களுக்கும், அறங்காவலர், தர்மகர்த்தா சபையினருக்கும், அனைவருக்கும் வேதவனப் பெருமானின் கருணையினால் சகல செல்வ யோகம் மிக்க பெருவாழ்வு கிடைக்கப் பிரார்த்தித்து, விநாயகர் பாதம் பணிந்து, அனைவரையும் வாழ்த்தி அமைகின்றேன்.



'வேதவன விநாயகனைத் தொழ வாழ்வு மிகுந்துவரும்'
வாழ்க! வளர்க! வணக்கம்.

42/11, சவிசுத்தாராம வீதி
வெள்ளவத்தை
கொழும்பு-06

(மட்டுவில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## 'வேதாகம கிரியா பூஷணம்', 'பிரதிஷ்டா கிரியா பானு'
## ஸ்ரீவிஷ்ணுஸ்ரீ க. ச. சோமாஸ்கந்தக் குருக்கள்

*ஸ்ரீ கணபதி துணை*

*ஸ்ரீ விநாயகர் அடியார்களே,*

*சைவமும் தமிழும் இரு கண்களாகக்கொண்டு, தென்மராட்சிப் பகுதியில் கல்வயல் பதியில் நான்கு பிள்ளையார் ஆலயங்கள் அமைந்து இருக்கின்றன. அவை, கல்வயல் பெருங்குளம் பிள்யையார், கல்வயல் வேதவனப் பிள்ளையார், கல்வயல் ஆயிலடிப் பிள்ளையார், கல்வயல் சித்தர் மாவடிப் பிள்ளையார் என, நான்கு மூலைகளும் விற்றிருந்து அருள்பாலிக்கின்றன.*



*இது, கல்வயல் கிராமம் செய்த தவப்பயன். அந்தத் தவத்தின் பயன், அந்த தவத்தின் முதலிடமாக வேதவனப் பிள்ளையார் ஆலயத்தில் புதிதாக இராச கோபுரம் அமைத்து, கும்பாபிஷேகம் நிகழ இருப்பதும், இந்த தெய்வீகத் திருப்பணி செய்துவரும் விநாயகர் அடியார்கள் அனைவரும் ஸ்ரீ விநாயகர் திருவருளைப்பெற்று பல்லாண்டு காலம் அவர்கள் தவப்பணி தொடரவும், இப் பெரும் சாந்தியை கண்காணிக்கின்ற அடியார்கள், ஆலய பரிபாலன சபையினர், உபயகாரர்கள் எல்லோரும் விநாயகர் பெருங்கருணையினால் இன்புற்று வாழ பிரார்த்தித்து, ஆசீர்வதித்து அமைகிறேன்.*

**பிரதம குரு**
**வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்**
**பொன்னாலை, சுழிபுரம்.**

**கல்வயல், பெருங்குளம்**
**அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## 'கிரியா வித்தகர்', 'வேதாகம ஜோதி'

## சிவஸ்ரீ சி. கிருபாகரக் குருக்கள்

எமது கல்வயலூரில் நான்கு விநாயகர் ஆலயங்கள் மக்களுக்கு திருவருள் பாலித்துக்கொண்டிருக்கின்றன. அவற்றுள் வேதவனப் பிள்ளையார் ஆலயம் பழமை வாய்ந்தது. இந்த ஆலயத்திலே புதிதாக இராஜகோபுரம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

ஆலயத்தின் அமைப்பை நோக்குவோமாயின், ஒரு மனிதன் நீட்டி நிமிர்ந்து படுத்திருக்கின்ற பாவனையில் ஆலயம் அமைகின்றது. மூலஸ்தானம் மனிதனின் சிரசையும், அர்த்த மண்டபம் கழுத்தையும், மகாமண்டபம் மார்பையும், தரிசன மண்டபம் வயிற்றையும், அருத்த மண்டபம் கால்களையும், இராஜகோபுரம் பாதங்களையும் கோபுர ஸ்தூபி விரல்களையும் குறிப்பதாக அறிந்துகொள்ளவேண்டும். தரிசனத்துக்கு வருகின்ற ஒருவர் முதலில் கோபுரத்தையே காண்கின்றார். இதனால், 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' எனச் சிறப்பித்துச் சொல்லப்படுகிறது.



கோபுரமானது கீழ்ப்பகுதி அகன்றும் மேல்நோக்கிச் செல்லச்செல்ல ஒடுங்கியும் காணப்படும். கோபுரத்தில் இறைவனுடைய திருவிளையாடல்கள், வாழ்க்கை வரலாறுகள், தெய்வ வடிவங்கள் போன்றவற்றை அமைப்பர்.

ஓர் ஆலயத்துக்கு கோபுரமே கடைசி எல்லையாகும். ஆனால், தற்போது நல்லூர் கந்தசாமி கோவிலைப் பார்த்து எல்லோருமே மணிமண்டபம் அமைக்கின்றனர்.

கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவிலுக்கு கோபுரம் அமைப்பதற்கு பொருள் செலவிட்டவர்கள், நல்ல முறையில் அமைத்த சிற்பிகள், வர்ணந் தீட்டியோர், தொடர்புகொண்ட பொதுமக்கள் எல்லோருக்கும் விநாயகப் பெருமானுடைய திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து ஆசிகூறி அமைகின்றேன்.

'ஸர்வே ஜனா ஸுகினோ பவந்து'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராஜகோபுரத் திருப்பணி வரவு செலவு அறிக்கை

### கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவில்

### வரவு அறிக்கை



| பெயர் | விலாசம் | தொகை |
|---|---|---|
| 1. க. கோபாலசிங்கம் | அராலி | 2,00,000.00 |
| 2. வே. சிவசுப்பிரமணியம் | கல்வயல் | 28,58,735.15 |
| 3. வே. சிவபாதசுந்தரம் | கல்வயல் | 28,58,735.14 |
| 4. சிவக்கொழுந்து மோகன் | கல்வயல் | 28,58,735.14 |
| 5. சிவகுமாரி சித்திராபதி | கல்வயல் | 28,58,735.14 |
| 6. ச. ஜெயநாதன் | மீசாலை | 9,92,500.00 |
| 7. கா. ஸ்ரீகணேசன் | கெருடாவில் | 1,03,000.00 |
| 8. இராஜலிங்கம் சிவகாமசுந்தரி ஞாபகார்த்தமாக அவர் குடும்பம் | சாவகச்சேரி | 1,00,000.00 |
| 9. திருமதி சிவகுமாரி | கெருடாவில் | 50,000.00 |
| 10. க. நடராசா ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் | கல்வயல் | 50,000.00 |
| 11. திருமதி B. சந்திரோதயம் | கல்வயல் | 39,359.43 |
| 12. சி. அருளானந்தம் | சங்கத்தானை | 25,000.00 |
| 13. V. T. செல்லையா ஞாபகார்த்தமாக செ. வடிவேலு | கல்வயல் | 15,000.00 |
| 14. சி. பிரகலாதன் | கல்வயல் | 10,000.00 |
| 15. வே சிவசுப்பிரமணியம் ஞாபகார்த்தமாக அவர் குடும்பம் | கிராம்புவில் | 5,000.00 |
| 16. நா. சுந்தரலிங்கம் | கல்வயல் | 6,000.00 |
| 17. திருமதி இ. புஷ்பராணி | கிராம்புவில் | 5,000.00 |

மொத்தம் 13,035,800.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பஞ்சதள இராஜகோபுர திருப்பணி - 2013

## செலவு



### விபரம்

| | | |
|---|---|---|
| 1. வியாழவரி மட்டம் வரை கூலி | | 1650,000.00 |
| 2. 5 தளம் வரை கோபுரக் கூலி | | 3250,000.00 |
| 3. 210 பொம்மைகள் + வண்ணம் | | 3500,000.00 |
| 4. கட்டடப் பொருட்கள் | | 3754,000.00 |
| | | (12154,000.00) |
| 5. முன் மண்டப மரங்கள் கழற்றிய கூலி | 2500.00 | |
| 6. சமயல் கொட்டில், துலா வேலை | 7800.00 | |
| 7. நாள் அத்திவாரம் | 8000.00 | |
| 8. தண்ணீர் இறைப்பு மெஷின் கூலி | 7000.00 | |
| 9. புதிய தண்ணீர் இயந்திரம் | 30000.00 | |
| | | 55,300.00 |
| 10. கதவு வேலை | 48000.00 | |
| 11. மின் இணைப்பு | 30000.00 | |
| 12. 5 கலசம், கருங்காலி | 92000.00 | |
| 13. கும்பாபிஷேகம் | 93000.00 | |
| | | 263,000.00 |
| 14. கேணி வேலை | | 563,500.00 |
| மொத்த செலவு | | 130,35,800.00 |

(ஒப்பம்: சு. சரவணமுத்து)
24.08.2013
(பணிப்பாளரும் நிதிப் பொறுப்பாளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல உரித்தாகட்டும்

வேதவனப் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகைதந்து எம்பெருமான் அனுக்கிரகங்களைப்பெற்று எமக்கு ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் அடியார்கள், பக்தர்கள், கல்வயல்வாழ் மக்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றிகள்.

ஆலய பூஜைகளையும் இராஜகோபுர கும்பாபிஷேக கிரியைகளையும் சிறப்பாக நடாத்திகொண்டிருக்கும் ஆலய அர்ச்கர், ஆலய பிரதம குரு, மற்றும் குருமார்கள், உற்சவங்களை சிறப்பாக நடாத்திக்கொண்டிருக்கும் உபயகாரர்கள், ஆலய பணிகளை முன்னின்றுசெய்து ஒத்துழைப்பு வழங்கும் இளைஞர்கள், அடியார்களுக்கும்;

எம்பெருமானின் திருப்பணிக்கு பல வழிகளிலும் பங்களிப்பு செய்தவர்களுக்கும் பங்களிப்பு செய்துகொண்டிருப்பவர்களுக்கும், இராஜகோபுரத்தை சிறப்பாக அமைத்துத்தந்த சிற்பாசாரியார் குழுவினர், மங்கள வாத்திய குழுவினர், பூமாலை அலங்காரம் செய்தோர், பணிகளை நிறைவுசெய்ய ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் தர்மகர்த்தா சபையினருக்கும்;



இதுவரைகாலமும் ஆலய பணிகளைச் சிறப்பாக நடாத்திவந்த கதிரேச பிள்ளை குடும்பத்தினருக்கும், ஆலய உற்சவங்களையும் திருப்பணிகளையும் தனித்தும் ஒருமித்தும் முன்னெடுத்து ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் பண்டிதர் திரு வேலுப்பிள்ளை குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும்;

எமது பிரசுரங்களை அச்சிட்டுத்தந்தோர், அச்சிட உதவியோருக்கும்;

இராஜகோபுரத் திருப்பணியை நிறைவேற்றுவதில் செயலாளர் திரு மகேந்திரன் அவர்களுடன் இணைந்து ஆலோசனை வழங்கிக்கொண்டிருக்கும் திரு சு. சரவணமுத்து அவர்களுக்கும், இராஜகோபுர கும்பாபிஷேக வரவு செலவு அறிக்கை மலருக்கு ஆசிகளையும் ஆக்கங்களையும் வழங்கியவர்களுக்கும் வேதவனப் பெருமானின் திருவருள் கிடைக்கவேண்டி, நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்,<br>
**நாகலிங்கம் ஜானகுமார்**<br>
தர்மகர்த்தா சபை<br>
சாவகச்சேரி வடக்கு,<br>
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதவனப் பிள்ளையார் கோவில் தர்மகர்த்தா சபை செயலாளரின்

# ஆசியுரை

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

ஈழத்திருநாட்டின் தென்மராட்சிப் பகுதியில் சைவமும் தமிழும் கமழும் கல்வயல் ஊரில் பழம்பெரும் ஆலயமாக அமைந்துள்ளது வேதவனப் பிள்ளையார் கோவில். இவ்வாலயம், சுமார் இருநூறு ஆண்டுகள் பழமைவாய்ந்தது. அந்தக் காலத்திலே, சைவ வேளாண் குலத்தைச் சேர்ந்த விதானை கதிரேசு என்பவரால், தமிழ் நாட்டின் வேதாரணியம் என்னும் புனித தலத்தில் இருந்து பூஜித்து இந்த விநயாகர் விக்கிரகம் கொண்டுவரப்பட்டு பிரதிஷ்டைசெய்து வழிபாடுசெய்யப்பட்டுவந்தது. வேதாரணியத்திலிருந்து கொண்டுவரப்பட்டமையால் 'வேதவனப் பிள்ளையார்' என நாமம் சூட்டப்பட்டது. இவ்வாலயத்தை விதானையார் பரம்பரையினர் பரிபாலித்துவருவதால் 'விதானை கோயில்' என அழைக்கப்படுவதும் உண்டு.

ஆலயம் அக்காலத்திலிருந்து இக்காலம்வரை படிப்படியாக வளர்ச்சிபெற்று வருகிறது. அந்த வகையில், ஆலய வளர்ச்சிக்கு கல்வயல்வாழ் மக்களும், பெரியோர்களும் இணைந்து பல திருப்பணிகளைச் செய்துவருகின்றனர். இதன் அம்சமாகத்தான் பிள்ளையாரின் அருளாலும், எம்பெருமானின் அடியார்கள் உதவியாலும் இராஜகோபுரம் ஒன்று அமைக்கவேண்டும் என்று, 22 ஆவணி 2012இல் அஸ்திவாரம் இடப்பட்டு, பஞ்சதளங்களைக்கொண்ட இராஜகோபுரம் இன்று விநாயக பெருமான் திருவருளால் நிறைவுசெய்யப்பட்டு, மங்களகரமான விஜய வருடம் ஆவணி மாதம் 30ஆம் நாள், 15.09.2013 ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிமுதல் 08.09 மணிவரையுள்ள கன்னி லக்கினமும் உத்தராட நட்சத்திரமும், வளர் ஏகாதசியும் அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தவேளையில் கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.



எம்பெருமான் திருவருளால் இராஜகோபுரத்தை அமைக்க முன்வந்த அடியார்களுக்கும், திருப்பணிக்கு உபயமாக நிதி உதவியை வழங்கிய கொடை வள்ளல்கள், கும்பாபிஷேகத்தை நிறைவுசெய்த சிவாச்சாரியார்கள், குருமார்கள், தர்மகர்த்தா சபையினர், இராஜகோபுரத்தை அமைத்த திரு கோபாலசிங்கம் ஆச்சாரியார் குழுவினர் அனைவருக்கும் எம்பெருமான் திருவருள் கிடைக்கவேண்டும் என வேதவனப் பெருமானின் பாதாரவிந்தங்களை வேண்டி, அனைவருக்கும் எனது நல்லாசிகளைக் கூறி நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

**இவ்வண்ணம்,**
**மார்க்கண்டு மகேந்திரன் (JP)**
**மீசாலை,**
**சாவகச்சேரி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

## கல்வயல் வேதவனப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா சபை சார்பாக...

"வேதவனத்து விநாயகரைத் தொழ
வாழ்வு மிகுந்துவரும் - வெவ்வினை
யாவும் அறுத்திடுவான்."

கல்வயலில் உள்ள ஆலயங்களில் வேதவனப் பிள்ளையார் ஆலயம் மிகவும் பழமை வாய்ந்ததும், பக்தி பரவசம் மிக்கதும் ஆகும். நம் முன்னோரின் வரலாற்றின்படி, சுமார் இரநூறு ஆண்டுகள் பழமைவாய்ந்ததாக அறிகின்றோம். அன்றுதொட்டு இன்றுவரை, தினம் நித்திய பூஜைகளும், உற்சவ நாட்களில் உற்சவ பூஜைகளும், புராண படிப்புக்கள், ஓயாத திருப்பணிகள் என்றெல்லாம் எப்போதும் நடந்துகொண்டே வருகின்றன.



இவ்வாறு, பலவழிகளிலும் ஆலய வளர்ச்சி சிறப்பாக அமைந்துவரும் காலப்பகுதியில், நாட்டு நிலைமை சிதைந்த காரணமாக பின்னடைவுகள் பல ஏற்பட்டன. கோயில் காணிகள், வயல்கள், தோட்டங்கள்பல செய்கை இல்லாக் காரணத்தால் கோயில் வரும்படி குன்றியது. ஆகையால், நித்திய பூஜை ஒரு நேரம் மாத்திரம் செய்யப்பட்டது. அப்படியிருந்தும், அடியார்கள் முயற்சியாலும், அறங்காவலர், தர்மகர்த்தா சபையினர் முயற்சியாலும் பூஜை இரு நேரத்துக்குக் கொண்டுவரப்பட்டது. பூசகர்கள் பலர் வெளிநாட்டுக்குப் போகநேர்ந்ததால் பூசகர்கள் தட்டுப்பாடும் பல கஷ்டங்களை ஏற்படுத்தின. இதன் காரணமாக பூசகருக்கென மேற்கு வெளிவீதிக்குப் பின்னால் சகல வசதிகளும்கொண்ட ஒரு வீடும் கட்டப்பட்டது.

இன்னும் சிறப்பாக பூஜைகள், உற்சவங்கள் நடைபெற்றுவரும்போது, நன்னீர் அவசியத்தை உணர்ந்த கல்வயலூர் பெருந்தகை திரு வினாசித்தம்பி அவர்கள் ஒரு நன்னீர்க் கிணற்றை அமைத்தார். அந்தக் கிணற்றின் நன்னீரானது விநாயகப் பெருமானின் கருணையால், கல்வயல்வாழ் மக்கள் மட்டுமல்ல, அயலூர் மக்களுக்கும் உதவக்கூடிய வகையில் ஒரு கொடையாக அமைந்துள்ளது.

திருமஞ்சனத் தீர்த்தக்கிணறு பழமை வாய்ந்ததாகப் பழுதடைந்து வருவதால், அதைப் புனரமைக்கவேண்டும் என்று என்னால் முயற்சி எடுக்கப்பட்டு, வெளியூர்களில் வாழும் விநாயக அடியார்களின் உதவியோடு வைரக்கற் கிணறாக கட்டி அமைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறங்காவலர் கதிரேசபிள்ளை மறைய, அவரது பணியை அவர் மகன் தங்கராசாவும் ஆலய தர்மகர்த்தா சபையினரும் இணைந்து மேற்கொண்டு வருகின்றார்கள். இவர்களின் அனுசரணையுடன் பிரம்மஸ்ரீ ஜெகதீஸ்வர சர்மா அவர்கள் நித்திய பூஜைகளையும் சிவப்பிரம்மஸ்ரீ பரராஜசேகரக் குருக்கள் அவர்கள் விசேஷ உற்சவங்களையும் சிறப்பாக நடாத்திவருகின்றனர்.

இவ்வளவும் நடந்துவரும் காலத்தில், அமரர் பண்டிதர் வேலுப்பிள்ளை அவர்களின் வேண்டுதல், தூண்டுதலுக்கேற்ப, வெளிநாடுகளிலுள்ள பிள்ளைகள் மூலமாகவும், மற்றும் அடியார்கள் உதவிகளோடும் பஞ்சதளம் வாய்ந்த இராஜகோபுரம் அமைக்க வேதவனப் பிள்ளையாரின் அருளும் கருணையும் கூட, 22.08.2012இல் அடிக்கல் நாட்டப்பட்டு, இன்று எம்பெருமான் திருவருளால் இராஜகோபுரம் நிறைவுபெற்று, 15.09.2013இல் இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெறுகின்றது.

இப்படி, பலவகையிலும் வளர்ச்சிபெற்று, பாரிய திருப்பணி நிறைவு பெற்றுள்ளமை குறித்து மகிழ்ச்சியும், பெருமையும் அடைகின்றோம். இந்த இராஜகோபுர திருப்பணியை வழிநடாத்திய தர்மகர்த்தா சபைச் செயலாளர் திரு மார்க்கண்டு மகேந்திரன் அவர்களுக்கும், திரு சுப்பையா சரவணமுத்து அவர்களுக்கும், இவ்வண்ணம் எம்பெருமான் திருப்பணிகளைச் செய்தோர், அடியார்கள், பக்தர்கள், இராஜகோபுரத்தை அமைத்தவர்கள், அனைவருக்கும் எம்பெருமான் திருவருளும் கருணையும் கிடைக்கப்பெற்று, மென்மேலும் நன்றாக அமையவேண்டும் என விநாயகனின் பாதார விந்தங்களை வேண்டி நிறைவு செய்கின்றேன்.





அன்புடன்,

**செல்லையா கதிரவேலு**

பொருளாளர், தர்மகர்த்தா சபை
வேதவனப் பிள்ளையார் கோவில்
கல்வயல்
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வண்ணமாய் எழுந்த வானுயர் கோபுரம்

நெல்வயல் சூழ்ந்த நிறைவளம் கொண்ட
கல்வயற் பதியமர்ந்த கணபதியாம் வேதவனன்
எல்லையில் புகழுடை எழிலார் கோபுரத்தை
நல்லெழில் கொண்டதாய் நன்றிங்கு கண்டனன்.

கண்டனன் கணபதி கவினுறவே இங்கும்
பண்டிதர் குடும்பத்தார் பாங்குடனே யமைத்த
எண்டிசை தெரியும் எழிலார் கோபுரம்
வண்ணமாய் எழுந்துமே வானுயரும் தோற்றம்.

தோற்றத்தால் உயர்ந்த தூயவெழிற் கோபுரம்
ஏற்றமுடன் அமைந்த எழிலார் கல்வயலார்
போற்றுமுயர் கணபதிதன் பொன்னடியே போற்றி
கூற்றனையே வெல்வோம் குதூகலமே காண்போம்.



காண்போம் நாமிங்கு காலையில் வாழ்வில்
மாண்பிலே யுயர்ந்து மண்டலமே புகழ்ந்திடத்
தூண்போல் நின்றருள் சுரக்கும் கணபதியால்
வண்மை யுடனெழுந்து வானுயரும் நிலையிலே.

நிலையிலே யுயர்ந்து நெடிதாய் நிற்கும்
விலையிலே யுயர்ந்த விஞ்சுபுகழ்க் கோபுரம்
கலையிலே சிறந்து கவினுறவே அமைந்து
தொலைவிலே தெரியத் துதிப்போம் நாமெல்லாம்.

நாமெல்லாம் துதித்து நலம்பல பெற்றிடவே
தாமெல்லாம் கூடித் தந்திமுகத் தையனுக்கு
வாமமுறு கோபுரம் வாகாய் அமைத்தவர்
நாமமே நிலைக்கட்டும் நாநிலம் போற்றவே.

- **செல்வராசா சுதாகரன்**
கல்வயல், சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதவன விநாயகன்மீது பாடப்பெற்ற

# திருவூஞ்சல் பா

சீராரும் பிரணவமே பீடமாகச்
        சிறப்பாரு முபநிடதம் பலகையாகப்
பேராரும் மந்திரங்கள் தவிசதாகப்
        பிறக்குமுயர் சக்திகளே விட்டமாகச்
சேராரும் பலகலைகள் கயிறதாகச்
        செய்தமைத்த ஊஞ்சன்மிசை வீற்றிருந்து
வேராரும் பலாமலிகல் வயலூர் மேவும்
        வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! -1

பரிதியுடன் மதிதானுங் குடைகள் தாங்கப்
        பகர் காலோன் பரிவுடனே கவரிவீச
விரிதிரைசே ரிறையால வட்ட மேந்த
        விண்ணவரும் மண்ணவரும் விரும்பி ஏத்த
அரியபல நடனங்கள் அரம்பை மாதர்
        ஆடல்செய நாரதர்தும் புருதாம் பாட
விரியுமருட் கல்வயலூர் கோயில் கொண்ட
        வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 2

பூதகண நாதர்கள் புகழ்ந்து போற்றப்
        புண்ணியநல் லடியார்கள் போற்றி செய்யக்
கீதவிசை பற்பலவும் கிளர்ந்து விம்மக்
        கின்னரர்யாழ் மீட்டியெழு பண்கள் பாட
நாதவொலி நாற்றிசையும் நணுகி யோங்க
        நற்றவர்வாழ் கல்வயலூர் கோவில் கொண்டு
வேதவொலி அந்தணர்கள் விரும்பி ஏத்த
        சேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேதனுடன் மாலவனும் விரும்பி ஏத்த
விண்ணவரும் இந்திரனும் வியந்து போற்ற
நாதமென நல்லவைங் கரத்தி னோடு
நலமாணும் பிரணவத்தின் உருவு தாங்கிப்
போதமவை உயிர்களுக்குப் பொருந்த நிற்கும்
போற்றுகய முகத்தவனே! புலவோர் வாழும்
மேதகவார் கல்வயலூர் கோயில் கொண்ட
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 4

சிந்தைதனில் நினைந்தவைகள் சிறந்து முற்றிச்
சிவகதியிற் சேர்க்கின்ற செம்மை சான்ற
அந்தமிலா அருள்மிகுந்த முருகன் மேலாம்
ஆறுபடை வீடுடையோன் அருளினாலே
வந்தகந்த புராணமெனும் அமுதை யோதி
மகத்துவமாந் மக்கள்பலர் மகிழ்ந்து வாழும்
விந்தைமிகு கல்வயலூர் கோயில் கொண்ட
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 5

திருமாலும் நான்முகனுஞ் சிறந்து போற்றிச்
செய்தொழில்க ளவைபெற்றுத் திகழ்ந்து வாழ
உருகார்வத் தோடுபெரி துவந்து போற்ற
உவமனிலா அருள்பொழிந்து வாழுகின்ற
பெருமானே! ஏரம்பா! பிரணவத்துப்
பேசரிய பொருளானே! ஔவை வேண்ட
விரைவினிலே கயிலைதனிற் கொண்டு சேர்த்தீர்!
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 6

நான்மறையி னுட்பொருளே! நாதா! விண்ணோர்
நாயகனே! நலமிக்க அகத்தியர்க்குத்
தேன்மிக்க கொன்றையணி சிவனா ரீந்த
தீர்த்தநிறை கமண்டலத்தைக் கவிழ்த்தே அன்று
வான்போற்று மிந்திரனுக் கருளி நின்றீர்
வயங்குநல பனசதல விருக்க மேவும்
மேன்மைதிகழ் கல்வயலூர் கோயில் கொண்டீர்!
வேதவன விவநாயகரே ஆடீரூஞ்சல்! - 7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்தமக் கருள்சுரந்த கருணை தோன்ற
சித்திபுத்தி தமைமணந்த சீர்மை தோன்ற
ஏவர்களுந் தொழுதேத்து மடிகள் தோன்ற
எம்மரிய வினைநீக்கும் அருளுந் தோன்ற
மூவர்க்கும் முதலான முதன்மை தோன்ற
முக்கண்கள் பொழிகருணை முழுதுந் தோன்ற
மேவலர்க்கும் அருள்சுரக்கும் மேன்மை தோன்ற
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 8

செஞ்சடைசேர் திருமுடியீர் ஆடீரூஞ்சல்!
சேருமொரு நாற்புயத்தீர் ஆடீரூஞ்சல்!
மஞ்சுதிகழ் மதியணிவீர் ஆடீரூஞ்சல்!
மாலயனுக் கருள்புரிவீர் ஆடீரூஞ்சல்!
கஞ்சநிகர் சேவடியீர் ஆடீரூஞ்சல்!
கடவுளருக் கருள் புரிந்தீர் ஆடீரூஞ்சல்!
விஞ்சுபுகழ்க் கல்வயலூர் மேவி வாழும்
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 9

வல்லபைசேர் பாகத்து மணாளா போற்றி!
வணங்குமவர்க் கருள்புரியும் வாழ்வே போற்றி!
சொல்லரிய பூதகண நாதா போற்றி!
தொழுவார்கந் துயர்தீர்க்குந் தேவே போற்றி!
கல்வயலூர்ப் பனசதலக் கடவுள் போற்றி!
கந்தனருட் புராணமது காப்பாய் போற்றி!
வெல்லுமொரு திருமருப்பு வீரா போற்றி!
வேதவன விநாயகரே ஆடீரூஞ்சல்! - 10

வாழி

திருவளரும் நான்மறைகள் சிறந்து வாழி!
சீரியநல் லாமகங்கள் சிறந்து வாழி!
உருவளரும் பூதிமணி அணிவோர் வாழி!
உயர்திருவார் ஐந்தெழுத்தாற் பணிவோர் வாழி!
பொருள்வளரும் முகில்வாழி! ஆன்கள் வாழி!
போற்றரசன் செங்கோலாற் பொலிந்து வாழி!
அருள்வளருங் கல்வயலூர் வாழி வாழி!
ஆங்கருளும் விநாயகர்தாள் வாழி வாழி! - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள் பல உரித்தாகட்டும்

வேதவனப் பிள்ளையார் ஆலயத்திற்கு வருகைதந்து எம்பெருமான் அனுக்கிரகங்களைப்பெற்று எமக்கு ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் அடியார்கள், பக்தர்கள், கல்வயல்வாழ் மக்கள் அனைவருக்கும் முதற்கண் நன்றிகள்.

ஆலய பூஜைகளையும் இராஜகோபுர கும்பாபிஷேக கிரியைகளையும் சிறப்பாக நடாத்திகொண்டிருக்கும் ஆலய அர்ச்கர், ஆலய பிரதம குரு, மற்றும் குருமார்கள், உற்சவங்களை சிறப்பாக நடாத்திக்கொண்டிருக்கும் உபயகாரர்கள், ஆலய பணிகளை முன்னின்றுசெய்து ஒத்துழைப்பு வழங்கும் இளைஞர்கள், அடியார்களுக்கும்;

எம்பெருமானின் திருப்பணிக்கு பல வழிகளிலும் பங்களிப்பு செய்தவர்களுக்கும் பங்களிப்பு செய்துகொண்டிருப்பவர்களுக்கும், இராஜகோபுரத்தை சிறப்பாக அமைத்துத்தந்த சிற்பாசாரியார் குழுவினர், மங்கள வாத்திய குழுவினர், பூமாலை அலங்காரம் செய்தோர், பணிகளை நிறைவுசெய்ய ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் தர்மகர்த்தா சபையினருக்கும்;



இதுவரைகாலமும் ஆலய பணிகளைச் சிறப்பாக நடாத்திவந்த கதிரேச பிள்ளை குடும்பத்தினருக்கும், ஆலய உற்சவங்களையும் திருப்பணிகளையும் தனித்தும் ஒருமித்தும் முன்னெடுத்து ஒத்துழைப்பு வழங்கிக்கொண்டிருக்கும் பண்டிதர் திரு வேலுப்பிள்ளை குடும்பத்தைச் சேர்ந்த அனைவருக்கும்;

எமது பிரசுரங்களை அச்சிட்டுத்தந்தோர், அச்சிட உதவியோருக்கும்;

இராஜகோபுரத் திருப்பணியை நிறைவேற்றுவதில் செயலாளர் திரு மகேந்திரன் அவர்களுடன் இணைந்து ஆலோசனை வழங்கிக்கொண்டிருக்கும் திரு சு. சரவணமுத்து அவர்களுக்கும், இராஜகோபுர கும்பாபிஷேக வரவு செலவு அறிக்கை மலருக்கு ஆசிகளையும் ஆக்கங்களையும் வழங்கியவர்களுக்கும் வேதவனப் பெருமானின் திருவருள் கிடைக்கவேண்டி, நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வண்ணம்,
நாகலிங்கம் ஞானகுமார்
தர்மகர்த்தா சபை
சாவகச்சேரி வடக்கு,
சாவகச்சேரி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உளமார்ந்த நன்றிகள்



வேதவன விநாயகப் பெருமான் திருவருட் பெரும் கடாட்சத்தினால் அடியார்கள் துணைகொண்டு இராஜகோபுரவாசல் பெருந்திருப்பணி நிறைவுகண்டுள்ளது. இராஜகோபுரத்தின் கம்பீரமான தோற்றம் கண்டு விநாயப் பெருமானின் பேரருட் கருணையிலே உளம் பூரித்து நிற்கின்றோம். வானவரும் நம் முன்னவரும் மேலிருந்து இக் கண்கொள்ளாக் காட்சியை கண்டு களிபேருவகை கொள்கின்றனர்.

இந்தப் பெரும்பணியின் நிறைவிலே எத்தனையோ பேர்களை நாம் குறிப்பிடலாம். எனினம் குறிப்பாக இப்பணியை முன்னின்று மேற்பார்வைசெய்த பணிப்பாளர் திரு சரவணமுத்து அவர்கள் மிகவும் முக்கியமானவர்களில் ஒருவராவார். சிற்பாசாரியார் அராலியூர் திரு கந்தசாமி கோபாலசிங்கள் அவர்கள் நாம் குறிப்பிடவேண்டிய மற்றமொரு முக்கியமானவர். மேலும், கோவில் அறங்காவலர் திரு கதிரேசபிள்ளை தங்கராஜா அவர்கள், தர்மகர்த்தா சபையைச் சேர்ந்த திரு மா. மகேந்திரன் மற்றும் திரு செல்லையா கதிரவேலு ஆகியோரது பெரும் பங்களிப்பான நல்லுதவிகளை நாம் அன்புடன் போற்றுகிறோம்.

மேலும், இந்தப் பெரும்பணி சிறக்க அருளாசி வழங்கியவர்கள், பொருள் வாரிக் கொடுத்தவர்கள், உடற்றொண்டாற்றி மகிழ்ந்தவர்கள், உளமார அன்புரைகள் அள்ளிச் சொரிந்தவர்கள் அனைவர்க்கும் வேதவனப் பதியுறையும் வேழமுக முன்னவனின் பேரருட் பெரும் கருணை நிறைந்தோங்க வாழ்த்துகிறோம்.

*நன்றி! நன்றி! நன்றி!*

**இராஜகோபுர அறப்பணி அடியார்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூர்வோம்...

# கோவில் திருப்பணிபற்றி அமரர் பண்டிதர்

திருப்பணிபற்றி மெய்கண்டசாத்திரச் சந்தான குரவர்களில் மூன்றாமவரான மறைஞானசம்பந்தர் தமது 'சைவ சமய நெறி' என்ற நூலில் எழுதிய குறள்,

"உய்வார் உதவுநிதி வாங்கித் திருப்பணியைச்
செய்வார் பெறுக சிவம்''.

*10.10.1985இல், திருப்பணி அறிக்கை (1983 - 1985)*



இதனைக் கோள்காட்டி அமரர் பண்டிதர் எழுதியது, திருப்பணிக்கு நிதி உதவுபவர்களே உய்வார்கள்.

உய்பவர்கள் கொடுக்கும் நிதியைக்கொண்டு தக்கமுறையில் சிக்கனமாய்த் திருப்பணியை நிகழ்த்துவோரும், அதற்கு உதவுவோரும் ஆகிய இருவருக்குமே புண்ணியப் பேறு உண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு கூர்வோம்...

# நல்லூரைப் பற்றிய நல்லுரை

"இப்பொழுது நல்லூரில் திருவிழாக் காலம். நல்லுரையாக நாம், நல்லூரைப்போல், அந்த அந்தப் பூசை, குறிப்பிட்ட அந்த அந்த நேரம் இங்கும் நடத்துவது, மணியோசைக்கு அப்பாலுள்ள அடியார்களுக்கு பெரும் தொண்டாகும்."


**- 02.08.1981இல் வெளியிடப்பட்ட, 1980 - 81ஆம் ஆண்டு திருப்பணிச் சபைக் கணக்கறிக்கையில், போஷகர் அமரர் 'ஆசிரியமணி' இ. த. சுப்பிரமணியம்**



பூசை நேரம் பற்றி இதற்கும்மேல் சொல்ல என்ன இருக்கிறது?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org